Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ராம்கோ ராம்கோ

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து

(சி-884)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 சித்திரை 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 04 (07.05.2003) புதன்கிழமை இதழ் : 215

# பிரபா – ஜப்பானியக் குழு இன்று முக்கிய சந்திப்பு!

## கைக்குண்டு வீச்சில் 'ராசீக்' குழு உறுப்பினர் காயம்!

இலங்கை இராணுவத்தின் தேசியக் காவற்படையைச் சேர்ந்தவரும், 'ராசீக்' ஆயுதக்குழுவைச் சேர்ந்தவருமான பற்குணம் ரமேஷ் என்பவர் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கைக்குண்டு வீச்சில் காயமடைந்தார்.

மட்டக்களப்பு நகரில் இத்தாக்குதலை நடாத்தியவர்கள், தப்பிவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். புதூரிலுள்ள அவரது வீட்டிலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

## புலிகளின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படும்

(கிளிநொச்சி)

**இன்று கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ள, ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர், தலைவர் பிரபாகரனைச் சந்தித்து மிகமுக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.**

இன்றுகாலை 10 மணியளவில் கிளிநொச்சி வரும் ஜப்பானிய உயர்மட்டக்குழுவில், ஆறுபேர் அங்கம் பெறுகின்றனர். விசேட தூதுவர் அகாஷியுடன், இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் செய்சுறோ ஒட்சுகா, ஜப்பானின் வெளியுறவு அமைச்சின் தென்மேற்காசியப் பிரிவுக்குப் பொறுப்பான தலைவர் ரேக்கியோ யமாடா, மற்றும் அப்பிரிவின் அதிகாரி றியோசுகே கமோனோ, ஜப்பானியத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர்களான கோஜி யாஜி, மசாத்தோமி ஒய்க்காவா, தூதரகத்தின் மொழிபெயர்ப்பாளர் எஸ்.ஏ.எஸ். டெவோட்டா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

ஜப்பானியக் குழுவுடனான சந்திப்பின்போது, தலைவர் பிரபாகரனுடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும் கலந்துகொள்கின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொறுமை இல்லாவிட்டால் நோர்வே திரும்பிவிடுங்கள்!

### ஜஸ்வந்த் சின்ஹா சொல்ஹெய்மிடம் கூறினாராம்

(கொழும்பு)

இலங்கையில் சமாதானப் பேச்சுக்கள் மிக நீண்டகாலத்துக்கு நீடிக்கும் என, இந்தியத்தரப்பு எம்மிடம் எச்சரித்துள்ளது என்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கம் வழங்கிய விருந்தில் கலந்துகொண்டபோது, இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் தொடர்பாகப் பேசியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே உயர்மட்டக்குழு நாளை வன்னி செல்கிறது

(கொழும்பு)

நோர்வே குழுவினர், நாளை வன்னி சென்று விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களை சந்திக்கவுள்ளனர். நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் பிரட்ஸ்கர் மற்றும் விசேட அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் வன்னிக்குப் புறப்பட்டுச் செல்லத் திட்டமிட்டுள்ளனர்.

இவர்களைத் தொடர்ந்து - இன்னும் ஓரிரு தினங்களில் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசனும், வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனும் வன்னி சென்று விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்திக்கவுள்ளனர்.

நோர்வேத் தூதுவரும், விசேட அனுசரணையாளரும் முன்னதாக வன்னி சென்றபின்னரே -

கொழும்பில் தங்கியிருக்கும் விதார் ஹெல்கிசன், நோர்வேயிலிருந்து வந்து சேரும் அமைச்சர் பீற்றர்சனையும் அழைத்துக்கொண்டே வன்னிக்குக் கிளம்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிழக்கு மாகாணத்துக்கு யசுசி அகாஷி விஜயம்!



மட்டு. நகரில் புனித மைக்கல் கல்லூரி அதிபர் அருட்திரு. மில்லர் அடிகளுடன் கலந்துரையாடுகிறார் ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி.

ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி, கிழக்கு மாகாணத்துக்கு நேற்று விஜயம் செய்தார். இவர் - திருகோணமலையில் மூதூர் மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்குச் சென்றிருந்தார்.

ஜப்பானிய விசேட தூதுவருடன் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் செய்சுரோ ஒட்சுகா, அமைச்சர் ரவூப் ஹக்கீம், வீடமைப்புப் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் மற்றும் திருமலை மாவட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் விஜயம் செய்தனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

பழுதடைந்த நிலையில் மணல் பற்றைக்குள்ளிருந்து

## வெடிகுண்டு பொருத்திய படகு வல்வெட்டித்துறையில் மீட்பு!

(வல்வெட்டித்துறை)

மிகவும் பழுதடைந்த நிலையில், குண்டுபொருத்திய கண்ணாடி இழைப்படகு ஒன்று, பொலிகண்டி கண்ணன் கோயிலருகில் உள்ள பற்றைக்காட்டுக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம், இப்படகைப் பற்றைக்குள் கண்ட பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, அப்பகுதிக்கு குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் வரவழைக்கப்பட்டனர். குண்டு செயலிழக்கச் செய்யப்பட்ட பின்னர், படகை - (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஆலோசனை சொல்ல மட்டும் பக்கத்து வீட்டார வீட்டால் வேறை ஆக்களில்லை.



# யாழில் சுமுகநிலை ஏற்படுத்தப்பட்டதும் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படும்!

## தற்போதைய நிலை குறித்து நாடாளுமன்றில் பிரதமர் விளக்கம்

(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் திறமை மிக்க அதிகாரிகள் எவ்வளவு விரைவாக முடியுமோ, அந்தளவுக்கு விரைவாக, மீண்டும் இலங்கையில் சமாதான முயற்சிகள் ஆரம்பமாக - தம்மாலான முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போதைய நிலைவரம் தொடர்பாக நீண்ட விளக்கம் அளித்து நேற்று, பிரதமர் நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

கடந்த மாதம் 21 ஆம் திகதி கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தாம் பேச்சுக்களில் இருந்து விலகுவதாகவும், அதற்கான காரணங்களைக் கூறியும் எனக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். பாலசிங்கத்துக்கு நான் கடந்த 29 ஆம் திகதி பதில் கடிதம் அனுப்பி வைத்தேன். பாலசிங்கம் சமாதானப் பேச்சுக்களை ஒரு காலப் பகுதிக்கு இடைநிறுத்துவதாகவே எழுதியிருந்தார். சமாதான முயற்சிகளை முடித்துக்கொள்வதாகவோ மீண்டும் போரை ஆரம்பிக்கப்போவதாகவோ அவர் எழுதவில்லை.

ஏனைய நாடுகளிலும் சமாதானப் பேச்சுக்கள் சில சமயங்களில், காலத்துக்குக் காலம் இடைநிறுத்தப்படுவது உண்டு. இது ஒன்றும் வழமைக்கு மாறானதல்ல. போர்நிறுத்த உடன்படிக்கையை கடந்த ஆண்டு பெப்ரவரி 22 இல் கைச்சாத்திட்டபோது கூட - சமாதானப் பேச்சுக்களில் தடைகள், தாமதங்கள் ஏற்படலாம் என நான் கூறியிருந்ததை நினைவுபடுத்துகிறேன்.

தற்போதைய நிலவரத்தை உங்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். முதலாவது - வளங்களைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128

(சி-881)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## தனியார் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளுவதற்கான விண்ணப்பம்

புனரமைக்கப்படும் யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு பாதுகாப்புச் சேவையை வழங்கக்கூடிய பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரம் பெற்ற தனியார் பாதுகாப்புச் சேவையினரிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பாதுகாப்புப் பணியில் பகல் 02 பேரும், இரவு 04 பேரும் பணியிலீடு படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் நிறுவனம் மாநகரசபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் சேவை விபரம், சம்பளம் அங்கீகாரம் பெற்றமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் போன்றவற்றுடன் யாழ். மாநகர ஆணையாளருக்கு 19.05.2003 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
30.04.2003

(சி-900)

## மனிதஉரிமை ஆணைக்குழு அதிகாரி பலாலிக்கு!

உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்ப் பாணக் கிளைத் தலைவர் பலாலிப் படைத்தளத்துக்குச் செல்லவுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர் பாக, எமது மக்களால் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்துக்கு கையளிக்கப்பட்ட நான்கு முறைப் பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடவே, அவர் அங்கு செல்லவுள்ளார்.

## அன்பளிப்பு

வேப்பெண்ணெயில் தயாரிக்கப்பட்ட நீம் சோப் மேலுறைகள் 3 ஐ அனுப்பி சமயகுரவர் நால்வரின் படத்தை அன்பளிப்பாக பெற்றுக் கொள்ளுங்கள்.

*தபால்பெட்டி இல 77,*
*மில்க்வைற்,*
*யாழ்ப்பாணம்.* (சி-903)

# வாழ்த்துகிறோம்

2 ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டி சைவம் வளரவும், சமாதானம் மலரவும், இந்து கலாசார அமைச்சின் நற்பணிகள் தொடரவும் எமது உளப் பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியுறுகிறோம்.

கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்,
கரவெட்டி.

(சி/906)

# இலங்கை அரசு

வடக்கு - கிழக்கு மாகாணசபை
வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத்திட்டம்
கடன் இல. 2880 சி.இ.
தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்
(நிர்மாண வேலைகள்)

## கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி.

ஐ.எவ்.பி.இல.பீரி/நீர்ப்/பிஎஸ்/01 திகதி: 06.05.2003

01. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒருபகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி (I.B.R.D.) கடன்வசதி, ஐ.டி.ஏ. (I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.

02. மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம், இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத்தொகுதி நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.
மீள் நிர்மாணம்:- பிரதேச செயலக அலுவலக கட்டடம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.

03. மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 ஐ காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான, யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து 09.06.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப் பத்திரங்களை பிரதம எந்திரி (கட்டடங்கள்) யாழ்ப்பாணத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதம எந்திரி,
மாகாண கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021-222-2632 தொலைநகல்:- 021-222-2634

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 11.06.2003 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன் கையளிக்கப்படல் வேண்டும். அதேதினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமூகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில், காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. வேறு விபரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

### அட்டவணை

| கேள்வி குறியீட்டு | வேலை விபரம் | கேள்விப்பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை நிறைவேற்ற படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| பிரி/நீர்ப்/டிஎஸ்/01 | மீள்நிர்மாணம் பிரதேச செயலக அலுவலக கட்டடம் சாவகச்சேரி யாழ்ப்பாணம். | 332,000/- | 1000/- | 12 மாதம் |

07. கேள்விதாரர்கள், கேள்விதாரருக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது.

செ. பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாணம்.

சி/904

## இணுவையம்பதியில்

2 ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய

# மாபெரும் இந்து கலாசார விழா - 2003

**மே 07 முதல் 10 வரை**

இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி நடாத்தும் இந்து கலாசார விழா நிகழும் சுபானு வருடம் சித்திரைத் திங்கள் 24 ஆம் நாள முதல் 27 ஆம் நாள் வரை (ஆங்கில வருடம் 07.05.2003 புதன்கிழமை முதல் 10.05.2003 சனிக் கிழமை வரை) சைவப்பணிமனை இணுவில் கந்தசுவாமி கோயில் இளங்தொண்டர் சபையில் நடைபெறவுள்ளது. ஆரம்ப நாள் நிகழ்வில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து 2 ஆவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்த மண்டப அடிக்கல்லை நாட்டி விழாவைச் சிறப்பிக்கவுள்ளார். இவ்விழாவில் தமிழக கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்து கலாசார விழாவிற்கு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

நன்றி

இந்து கலாசார விழாக்குழு

"சைவப் பணிமனை"
இணுவில் கந்தசாமி கோயில்
இளந்தொண்டர் சபை.

(337)

# ஒப்பந்தக்காரர்கள் கவனத்திற்கு

1. தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பாரிய மீள்குடியேற்றத் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தவுள்ளது. முதற்கட்டமாக 08 மாவட்டங்களிலும் 08 கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட "சிறான்" இன் அனுமதி கிடைத்துள்ளது.

| இல. | மாவட்டம் | கிராமம் |
|---|---|---|
| 01. | கிளிநொச்சி | தம்பகாமம் |
| 02. | முல்லைத்தீவு | உப்புமாவெளி |
| 03. | வவுனியா | கல்மடு |
| 04. | மன்னார் | சொர்ணபுரி |
| 05. | யாழ்ப்பாணம் | ஆழியவளை |
| 06. | திருகோணமலை | மாங்காயூற்று |
| 07. | மட்டக்களப்பு | புல்லுமலை |
| 08. | அம்பாறை | தங்கவேலாயுதபுரம் |

2. இத்திட்டத்தில் பின்வருவன அடங்கும்.
- புதிய முன்பள்ளிகள், முன்பள்ளித் திருத்தம்.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள்.
- வீதி புனரமைப்பு.
- விளையாட்டு மைதானம்.
- பொதுக் கிணறு திருத்தம், புதியது.
- புதிய மலசலகூடங்கள்.
- சிறுவர் பூங்கா.
- குளங்கள்.
- பொது மண்டபம்.
- பாடசாலைத் திருத்தம்.

3. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் தங்கள் தொடர்பினை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

3. 1) இக்கடிதத்தில் பின்வரும் விபரங்கள் இருத்தல் அவசியமாகும்.
1. நிறுவனத்தின் பெயர்:-
2. நிறுவன பதிவு இல:-
3. நிறுவன சொந்தக்காரரின் பெயர்:-
   விலாசம்:-
4. தொடர்பாளரின் பெயர்:-
5. தொடர்பாடலுக்கான இலக்கங்கள்:-
6. எவ்வளவு கால அனுபவம்:-
7. எத்துறையில் நிபுணத்துவம்:-
8. முன்னர் செய்த சாதனைகள்:-
9. நிறுவன ஆளணி எண்ணிக்கை:-
10. தகுதியை வெளிப்படுத்தும் வேறு விபரங்கள்:-

4. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனான தொடர்புகளுக்கு
- விலாசம்:- த.பு.கழகம், நடுவப் பணியகம், கண்டிவீதி, கிளிநொச்சி.
- தொலைபேசி:- 021 222 3947
- தொலைநகல்:- 021 222 3947
- ஈமெயில்:- tro kili@dialogal.net

(சி-901)



1990 ஆம் ஆண்டு ஜமாலியாவில் ஈ.என்.டி.எல்.எவ். முகாமைத் தாக்கிவிட்டுத் திரும்பும்போது, படகு விபத்தில் வீரச்சாவடைந்த 22 புலிகளின் நினைவாக - திருகோணமலை, கோபாலபுரத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை புலிகளின் நிலாவெளிப் பிரதேசப் பொறுப்பாளர் திறந்துவைப்பதையும், குச்சவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுடரேற்றுவதையும், மாவீரர்களின் பெற்றோர் மலரஞ்சலி செலுத்தி, ஈகச் சுடரேற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: திருமலை நிருபர் கௌதமன்)

## சிறி மகாபோதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

அநுராதபுரத்திலுள்ள சிறி மகா போதியின் பாதுகாப்பை உறுதி செய்ய, விசேட கமராவைப் பொருத்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு விசேட பாதுகாப்பு ஒழுங்குகளைச் செய்வதன் மூலம் யாத்திரிகர்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாதெனவும் அவர் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கிரி அக்கரபத்த விகாரையில் ஸ்கானர் இயந்திரத்தைப் பொருத்தவும் நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்லைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் திரைப்படக் காட்சித் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு நிக்கலஸ் குளோட்ஸ் இயக்கிய "பெங்கோலி நைற்" (The Bengoli night) எனும் ஆங்கிலத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

# உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கம் அகற்றக்கூடாது!

## முஸ்லிம் லீக் கட்சி கோருகின்றது

நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை, தற்போதுள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றக்கூடாது என்றும், முஸ்லிம் பிரதேசங்களைப் பாதுகாக்க புதிய உயர்பாதுகாப்பு வலயங்களை அமைக்க வேண்டும் என்றும் முஸ்லிம் லீக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற முஸ்லிம் லீக்கின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக முஸ்லிம் லீக் மேலும் தெரிவித்திருப்பதாவது,

மூதூரில், முஸ்லிம்களைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது. மூதூரில் கலகங்கள் ஏற்பட்டதற்கு விடுதலைப் புலிகளைச் சிங்கள - முஸ்லிம் கிராமங்களூடாகச் செல்ல அனுமதித்ததே காரணமாகும்.

மூதூர், கிண்ணியா போன்ற பகுதிகளில் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களைப் பாதுகாக்க உயர் பாதுகாப்பு வலயங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்துடன், மூதூர் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச நாடுகளிடமிருந்து பயங்கரவாதிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்பட முன்னர், மூதூரில் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மர்மப்பொருள் வெடித்து பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

நிலத்திலிருந்த விறகைக் கத்தியால் வெட்டியவேளை, மர்மப் பொருள் வெடித்ததில், பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் நாவற்குழி செல்வ நகரில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் குமாரசேகரம் கெங்காதேவி (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார். முகம், கை என்பவற்றில் பலத்த காயங்களுடன் இவர் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ச)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை வைத்தீஸ்வரன் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம், இன்று காலை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பல வருடங்களுக்குப் பின் ஆலயப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

# பிரபாவுடனான சந்திப்பு மூலம் நல்ல முடிவுகள் கிடைக்கும்!

## ஜப்பானிய சமாதான தூதுவர் அகாஷி நம்பிக்கை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான இன்றைய சந்திப்பு நட்புரீதியானதாக அமையும் என ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு செய்தியாளர் மத்தியில் இந்தச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்டார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

வன்னியில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசவுள்ளேன். இந்தச் சந்திப்பு நட்புரீதியானதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இநதச் சந்திப்பின்போது, பேச்சுக்களிலிருந்து புலிகள் தற்காலிகமாக விலகுவதாக அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம்-பிரதமருக்கு அனுப்பிவைத்த கடிதம் குறித்தும் -

இதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிவைத்த பதில் கடிதம் குறித்தும் பேசவுள்ளேன்.

அத்துடன், சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை, புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படும் விதம், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு விவகாரங்கள், ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவிவழங்கும் மாநாடு என்பன பற்றியும் பிரபாகரனுடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள், பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகுவதாக விடுத்த அறிவிப்பு - சில தரப்பினருக்குச் சமாதானப் பேச்சுக்களிலிருந்து புலிகள் விலகிவிடுவார்கள் என்ற அவநம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது.

ஆனால், சமாதான முயற்சிகளில் அவர்கள் காட்டிவரும் ஆர்வம், மிகுந்த நம்பிக்கையைத் தருவதாக இருக்கிறது. எனவே, இப்பேச்சுகளின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தப் புலிகள் தவறிவிட்டார்கள் எனக் கூறப்படுவதை ஏற்க முடியாது.

சமாதானப் பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்ட சில விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த விடயத்தில் புலிகள் அடைந்துள்ள ஏமாற்றத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது.

இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான இன்றைய சந்திப்பின் பின்னர், நல்லமுடிவுகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். ரோக்கியோவில் உதவிவழங்கும் மாநாடு திட்டமிட்டபடி நடக்கும் என்றும் யசுஷி அகாஷி நம்பிக்கை வெளியிட்டார்.

# பொலிஸாரின் செயற்பாடுகள் கணினி மயப்படுத்தப்படும்!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கைகளைக் கணினிமயப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

பொலிஸாரின் விசாரணைகளைத் துரிதப்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இதன்படி கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்தல், போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள், பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள், புலனாய்வுப் பிரிவு, மோட்டார் வாகன விபத்துப் பிரிவு ஆகியன உள்ளிட்ட ஏழு துறைகளைக் கணினிமயப்படுத்தப் பொலிஸ் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இநதக் கணினி இணைய வலையபின்னல் முறை மூலம் பொலிஸ் தலைமையகத்தையும்- நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களையும் இணைக்க முதற்கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்மூலம் குற்றச்செயல்களைத் துரிதமாகக் கட்டுப்படுத்தவும், விரைவாக விசாரணைகளைத் தொடரவும் வாய்ப்பாக இருக்கும் என்றும், பொலிஸாரின் வேலைப் பழுவைக் குறைத்துக்கொள்ள முடியும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

# தமிழ்க்கட்சிகளுக்கு ஆயுதம்; வழங்க அரசாங்கம் மறுப்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மீண்டும் ஆயுதங்களை வழங்கமுடியாது என உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, மீண்டும் அரசு தமக்கு ஆயுதங்கள் வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததை அடுத்தே, உள்துறை அமைச்சின் செயலாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களை வழங்குவது - போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் நடவடிக்கை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமக்குக் கொலை அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதும் எந்தவொரு தமிழ்க்கட்சித் தலைவரும் - தனிப்பட்ட பாதுகாப்புக்காக ஆயுதம் வழங்குமாறு உள்துறை அமைச்சருக்கு விண்ணப்பிக்கலாம்.

அவ்வாறு விண்ணப்பித்தால், அவரது தனிப்பட்ட பாதுகாப்புக்கு ஆயுதங்களை வழங்கலாம் என்றும் உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என்.ஜுனைட் தெரிவித்தார்.

இதேவேளை, உயிருக்கு அச்சுறுத்தலுள்ள தமிழ்க்கட்சிகளின் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - முப்படைத்தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

16 நாட்களுக்குள் இரண்டு பிரதேசசபைத் தலைவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு பிறப்பித்தார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# அரச மருத்துவ சங்கத்தினர் நாளை முதல் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மருத்துவர் சங்கத்தினர் நாளை முதல் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

அரச மருத்துவர்கள் மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளுக்கும் இடையிலான சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கும்படி, அமைச்சரவை உபகுழு அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும், அரசாங்கம் இதுவரை இது தொடர்பான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாதிருப்பதைக் கண்டித்தே, அரசாங்க மருத்துவர் சங்கத்தினர் மேற்படி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, வேலை நிறுத்தப் போராட்டம் திட்டமிட்டபடி நடைபெறுமானால், நாடு முழுவதும் மருத்துவ சேவைகள் பெருமளவில் பாதிக்கப்படலாம் என அஞ்சப்படுகிறது.

# நான்கு முத்திரைகளை வெளியிட நடவடிக்கை

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் அச்சிடப்படட நான்கு முத்திரைகள் வெளியிடப்படாமல் முடக்கிவைக்கப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்சிடப்பட்ட முத்திரைகள் வெளியிடப்படாமல் இருப்பதால், கோடிக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வண.மாபுலாகம விபுலசார தேரோ, மைத்திரிபால சிறிசேன, எம்.ஜி.மெண்டிஸ், சி.சிற்றம்பலம் ஆகியோர் நினைவாக வெளியிடப்பட்ட முத்திரைகளே விற்பனைக்கு விடப்படாமல் வைக்கப்பட்டிருந்தன.

இதையடுத்து அரசாங்கம் இந்த முத்திரைகளை வெளியிடுவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

# தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை கொச்சைப்படுத்த பணத்தைக் கொட்டும் இந்தியா

## ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா குற்றச்சாட்டு

(திருகோணமலை)

ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பி, சிஹல உறுமய, ஈ.பி.டி.பி மற்றும் இதர கட்சிகளைத் தூண்டிவிட்டு, தமீழர்களுடைய நியாயமான கோரிக்கைகளைக் கொச்சைப்படுத்த, இந்தியா பெருமளவு பணத்தை வாரி இறைக்கின்றது என -

ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா, திருமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த ரெலோவின் முன்னாள் தலைவர் சிறிசபாரத்தினம் நினைவுக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும், யார் என்ன சொன்னாலும் தற்போதைய பேச்சுவார்த்தையும், தற்போதைய சந்தர்ப்பமும் தமிழினத்தைப் பொறுத்தவரையில் இறுதியும், உறுதியுமான சந்தர்ப்பம்.

இந்தச் சந்தர்ப்பத்தில், தமிழினம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கைகோர்த்து, ஒன்றுதிரண்டு - ஒரே தலைவராக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஏற்றுள்ளது.

நாம் எமது முயற்சிகளில் உறுதியுடன் வெற்றிபெறுவோம். இந்தியா மட்டுமல்ல, சர்வதேசமும் எதிர்த்தாலும் இறுதி இலட்சியம் நிறைவேறியே தீரும். அதனை நாம் அனைவரும் இணைந்து நிறைவேற்றியே தீரவேண்டும் என தெரிவித்தார்.

இந்தக்கூட்டத்தில் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றும்போது,

இலங்கை அரசு தமிழர்களை ஏமாற்றவே பார்க்கின்றது. சர்வதேச ஆதரவினைப் பெற்றுக்கொள்ள, புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகும் சூழ்நிலை ஏற்பட்டால், ஒட்டுமொத்தத் தமிழினத்தையும் நசுக்கிவிடலாம் என்றும், அதற்குச் சர்வதேசத்தின் துணையைப் பெறலாம் என்ற வகையிலேயே அரசின் போக்கு இருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை அரசு தமிழினத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுள்ள அரசியற்



தீர்வைத் தரப்போகின்றதா? இல்லை இந்த நாடு இருவேறு தேசங்களாகப் பிரிவதற்கு வழிவகுக்கப்போகின்றதா? எதைச் செய்யப்போகின்றது என்பதை இலங்கை அரசே தீர்மானிக்கட்டும்.

யாழ்.நகரில் சனநடமாட்டம் அதிகரித்த கோட்டைப்பகுதியில் இராணுவத்தினர் முகாம் அமைப்பதற்கு இந்திய அரசு நிதியுதவியையும், கட்டட நிர்மாணத்திற்குப் பொருட்களையும் வழங்க முன்வந்திருப்பது, எமது இனத்திற்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் பக்கச்சார்பற்ற நடுநிலைத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய இந்திய அரசு இவ்வாறு நடந்து கொள்ளத் தீர்மானித்திருப்பது எமக்குக் கவலை தருகின்றது எனக் குறிப்பிட்டார்.

## பில்லி சூனிய ஒழிப்புக்காக சமயசடங்கு நடத்தவில்லை

### நிராகரிக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன

பில்லிசூனிய ஒழிப்புக்காகத் தாம் சமயச் சடங்குகளைச் செய்ததாக ஏ.எவ்.பி வெளியிட்ட செய்தி தவறானது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

மக்களிடம் உள்ள நன்மதிப்பையும், கௌரவத்தையும் குறைப்பதற்காகவே திட்டமிட்டுச் சில ஊடகங்கள் இவ்வாறு செய்தியை வெளியிட்டன. அரசியல் இலாபத்துக்காகவே இத்தகைய செய்திகள் வெளியிடப்படுகின்றன.

செய்திகளில் குறிப்பிடப்பட்டது போன்ற எந்தவொரு சமயச்சடங்கும் எனது வீட்டில் நடத்தப்படவில்லை. அவ்வாறு மதரீதியான பாதுகாப்புத் தேடவேண்டிய தேவையும் எனக்கு இல்லை.

எனக்கு நிறையவே தற்துணிவு உள்ளது. என்னைப் பாதிக்கும் பேய்கள், இத்தகைய செய்திகளை வெளியிடும் ஊடகங்கள்தான் என்றும் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியை வெளியிட்ட ஏ.எவ்.பி.க்கு எதிராக, அவர் 100 மில்லியன் ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கலும் செய்யவுள்ளார்.

### மிதிவெடி விழிப்புணர்வு நேர அட்டவணை

மிதிவெடி பற்றிய விழிப்புணர்வை பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் - மாணவர்களுக்கு நேர அட்டவணை ஒன்று வழங்கப்படவுள்ளது.

இந்த நேர அட்டவணைகளை 'யுனிசெப்' நிறுவனமும், தேசிய கல்விநிறுவகமும் இணைந்து கல்விப் பணிமனை அதிகாரிகளிடம் கையளித்துள்ளன. 2 ஆம் தவணை ஆரம்பமானவுடன், மாணவர்களுக்கு இவை வழங்கப்படும்.

### சைவசமயப் பேரெழுச்சி விழா

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு - சுன்னாகம் ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தின் ஆதரவில் நடத்தப்படவுள்ள சைவசமயப் பேரெழுச்சி விழா, நாளை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மாலை 4மணி முதல் மணி மண்டபத்தில் விசேட கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும். தொடர்ந்து இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சமயப் பெரியார்களின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

### இந்து மாநாட்டையொட்டி விசேட நிகழ்வு

2 ஆவது உலக இந்து மாநாட்டையொட்டி ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சித் தொடரில் - விசேட நிகழ்வாக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பண்ணிசை, திருமுறை ஓதல், பட்டிமன்றம், நாட்டிய நாடகம், சமயச் சொற்பொழிவுகள் என்பன நடைபெறவுள்ளன.

## ரத்வத்தவுக்குப் பாதுகாப்பு; எவ்வகையில் சட்டவிரோதம்?

### ஜோன் அமரதுங்கவிடம் சந்திரிகா கேள்வி

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு, பாதுகாப்பை அதிகரிக்குமாறு தான் விடுத்த உத்தரவை - உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க நிராகரித்திருப்பதை, ஜனாதிபதி சந்திரிகா கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக ஜோன் அமரதுங்கவுக்கு, ஜனாதிபதி சந்திரிகா அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

ஜெனரல் ரத்வத்தவுக்கு பாதுகாப்பு வழங்க உத்தரவிட்டதை, எனது அமைச்சரவையிலுள்ள அமைச்சர் என்பதை மறந்துவிட்டு, சட்ட விரோதமானதெனக் கூறியுள்ளீர்கள்.

உங்கள் மீது இதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும்.

ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு பாதுகாப்பு வழங்கக் கேட்பது எந்த வகையில் சட்டவிரோதமானது?

ஜெனரல் ரத்வத்த ஒரு முன்னாள் அமைச்சர் என்பதை மறந்துவிட்டு இவ்வாறு கூறியுள்ளீர்கள்.

இராணுவப் புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாகப் படுகொலை செய்யப்பட்டுவரும் இவ்வேளையில் - ஜெனரல் ரத்வத்தவுக்கு பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவிட்டது. சட்டவிரோதமானதென எவ்வாறு வாதிட முடியும் என்றும் ஜோன் அமரதுங்கவிடம், ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : த.ஆகாஷ்
முகவரி : திருவந்தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

மூன்றாவது அகவையில்

பெயர் : கி.ஆதனா
முகவரி : பொன். கந்தையா வீதி, நெல்லியடி, கரவெட்டி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு :------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைச்
------------------
பெற்றார் ஒப்ப...

gtz **German Technical Co-operation**

**Capacity Building for School Development Societies**

**GTZ-International Service of Asia - Jaffna Rehabilitation Joint Program funded by European Union.**

**Vacancy for Field Officer**

**Applications are invited from suitably qualified graduates for capacity building of School development Societies of Schools which are rehabilitated by GTZ - International Service Asia.**

**Responsibilities**

★Organising and conducting workshops.
★Analysing the strengths and weakness of existing SDS.
★Co-ordinating with the Department of Education and respective schools.
★Facilitating the SDS and students to promote their leadership skills.
★Reporting the progress to social mobilisation Unit of GTZ-JRP.
★Identify and motivate suitable persons to carry out sustainable activities.

**Qualification**

★Degree form the University or equivalent qualification.
★Previous experience in participatory approach in the NGO sector.
★Good interpersonal communication skills.
★Skills in situation analysis.
★Able to perpare reports and documents in English.
★Able to ride a motor bike with licence.

**Employment Duration:- Three Months.**

**Please forward your application on or before 18th May 2003.**

**TO:-**
**Social Mobilisation Unit,**
**GTZ-JRP**
**472, Main Street,**
**Jaffna.**

(சி/907)


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவருக்கான முன்னாயத்தப் பயிற்சிகள்



# மாணவர் மலர்

(1) குகதாசன் என்பவர் ஒருநாள் இரவு தனது நண்பன் சந்திரமோகன் வீட்டில் தங்கினார். மறுநாள் தனது வீட்டிற்கு வந்தபோது அதிர்ச்சியடைந்தார். அவரது அறையில் உள்ள பொருட்கள் எல்லாம் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன.



மேலே தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடை தருக.

1. சுவர்க்கடிகாரம் எங்கே இருக்கிறது?
   ..............................................
2. பூச்சாடி எங்கே இருக்கிறது?
   ..............................................
3. கைப்பை எங்கே இருக்கிறது?
   ..............................................
4. மேசைக்கு மேலே என்ன இருக்கிறது?
   ..............................................
5. புத்தகங்கள் எங்கே இருக்கின்றன?
   ..............................................
6. பூக்கள் எங்கே இருக்கின்றன?
   ..............................................
7. மேசை மின் விளக்கு எங்கே இருக்கிறது?
   ..............................................
8. தொலைபேசி எங்கே இருக்கிறது?
   ..............................................
9. குகதாசனின் வீட்டில் உள்ள பொருட்களின் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக.
   (1) அலுமாரி ..............................
   (2) தொலைபேசி ..............................
   (3) பூச்சாடி ..............................
   (4) கதிரை ..............................
   (5) மின்விசிறி ..............................
   (6) சுவர்க்கடிகாரம்..............................

(2) கடந்த ஆறு மாதங்களில் கடையொன்றில் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| நவம்பர் - 128 | டிசம்பர் - 216 | ஜனவரி - 307 |
| பெப்ரவரி - 321 | மார்ச் - 284 | ஏப்ரல் - 489 |

1. எந்த மாதத்தில் கூடுதலாகப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன? (..............................)
2. ஏப்ரல் மாதத்தைவிட மார்ச் மாதத்தில் எத்தனை புத்தகங்கள் குறைவாக விற்பனை செய்யப்பட்டன? (..............................)
3. நவம்பர் மாதத்தில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களிலும் பார்க்க எத்தனை புத்தகங்கள் டிசம்பர் மாதத்தில் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன? (..............................)
4. ஜனவரி மாதத்திலும் பார்க்க பெப்ரவரி மாதத்தில் எத்தனை புத்தகங்கள் குறைவாக விற்பனை செய்யப்பட்டன? (..............................)
5. நவம்பர், டிசம்பர் மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களிலும் பார்க்க ஏப்ரல் மாதத்தில் எத்தனை புத்தகங்கள் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டன? (..............................)
6. கடந்த ஆறுமாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது? (..............................)
7. குறித்த இரண்டு மாதங்களில் விற்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையின் வித்தியாசம் 168 ஆகும். அம்மாதங்கள் யாவை? (..............................)
8. குறித்த இருமாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 435 ஆகும். அம்மாதங்கள் யாவை? (..............................)
9. கூடுதலாகப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்ட மாதத்தின் எண்ணிக்கைக்கும், குறைவாகப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்ட மாதத்தின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது? (..............................)
10. குறித்த இரு மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையின் வித்தியாசம் 79 ஆகும். அம்மாதங்கள் யாவை? (..............................)
11. கடந்த ஆறு மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கைகளை ஏறுவரிசையில் எழுதுக? (..............................)
12. கடந்த ஆறு மாதங்களில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கைகளை இறங்குவரிசையில் எழுதுக? (..............................)

(3) பின்வரும் கூட்டிலுள்ள வெற்றுச் சதுரங்களிலே பொருத்தமான எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கி எழுதுக.
சொற்களை ஆக்குவதற்குக் கீழே தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்புக்களைப் பயன்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பு | | 2 | 3 ண் | | ■ |
| | ■ | | | ■ | 4 |
| 5 | 6 | ம் | ■ | 7 | ணி |
| 8 | லை | ■ | 9 | | ■ |
| | ■ | 10 | | ■ | 11 |
| ■ | 12 | ட் | | ■ | ணை |

### இடமிருந்து வலம்

1. நாம் பிரயாணம் செய்யும் வாகனங்களுள் ஒன்று
5. முனிவர்கள் இறைவனை வேண்டிச் செய்வது.
7. இதனைச் சுவரில் அறைந்து படங்களைத் தொங்கவிடுவர்.
8. ஆண் மானைக் குறிப்பது.
9. தலைமயிரைக் குறிக்கும் மற்றொரு சொல்.
10. பார்ப்பதற்கு அவசியமானது.
12. எல்லா உணவுச் சத்துக்களும் நிறைந்த பொருள்.

### மேலிருந்து கீழ்

1. படிப்பதற்கு அவசியமானது.
2. இடது பக்கத்தின் எதிர்ப்பக்கம்.
3. ஆண் இடம் மாறியிருக்கிறார்.
4. ஆலயங்களில் அதிகாலையில் ஒலிப்பது.
6. மீன் பிடிப்பதற்கு உதவுவது.
7. உடுக்கும் உடை.
9. இது இல்லாமல் போனால்தான் சமாதானம் வரும்.
11. கிளையில்லாத ஒரு மரம்.

(4) கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தலைக் கவனமாக வாசித்து அதன் பின்னர் விடையளிக்கவும்.

**தமிழ்மொழித் தினம் - 2003**

இவ்வாண்டுக்கான தமிழ்மொழித் தினவிழா ஜூ லை மாதம் 15 ஆம் திகதி விபுலானந்தர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இவ்விழாவையொட்டிப் பாடசாலை மாணவருக்கிடையில் பல போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறும். அவற்றின் விபரங்கள் வருமாறு.

| போட்டிக்கான பிரிவுகள் | நிகழ்ச்சிகள் |
|---|---|
| முதலாம் பிரிவு - தரம் 4, 5 | வாசிப்பு, பேச்சு, பாவோதல், உறுப்பெழுத்து. |
| இரண்டாம் பிரிவு - தரம் 6, 7, 8 | பேச்சு, பாவோதல், கட்டுரை, நாடகம். |
| மூன்றாம் பிரிவு - தரம் 9, 10, 11 | பேச்சு, பாவோதல், கட்டுரை, நாடகம். |
| நான்காம் பிரிவு - தரம் 12, 13 | பேச்சு, நாடகம், வாய்ப்பாட்டு இசை, நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு. |

நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு ஆகிய நிகழ்ச்சிகளில் 10 பேர்வரை பங்குபற்றலாம். இப்போட்டிகள் பின்வரும் நான்கு நிலைகளில் நடைபெறும்.

1. பாடசாலை நிலைப் போட்டிகள்
2. வலய நிலைப் போட்டிகள்
3. மாகாண நிலைப் போட்டிகள்
4. தேசிய நிலைப் போட்டிகள்

மாகாண நிலைப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெறுபவர்கள் தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

(1) தரம் 6, 7, 8 மாணவர்கள் எப்பிரிவுக்குரியவர்கள்?
..............................................
(2) 2 ஆம், 3 ஆம், 4 ஆம் பிரிவுகளுக்கான பொதுவான போட்டி நிகழ்ச்சிகள் எவை?
..............................................
(3) நான்கு பிரிவுகளுக்கும் பொதுவான போட்டி நிகழ்ச்சி எது?
..............................................
(4) தேசிய நிலைப் போட்டிகள் எங்கே, எப்பொழுது நடைபெறும்?
..............................................
(5) தேசிய நிலைப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதியுடையவர்கள் யார்?
..............................................
(6) மாணவர் குழுவாகப் பங்குபற்றக்கூடிய போட்டி நிகழ்ச்சிகள் எவை?
..............................................
(7) மாகாண நிலைப் போட்டிகள் நடைபெறுவதற்கு முன், எந்த மட்டங்களிலேயே போட்டிகள் நடைபெறும்?
..............................................
(8) வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் எத்தனை மாணவர்கள் பங்குபற்றலாம்?
..............................................
(9) பாடசாலை போட்டிகள் முதலில் எந்த நிலையில் நடைபெறும்?
..............................................

(5) "நாங்கள் நடித்த குட்டி நாடகம்"......... என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தபட்சம் நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

1..............................................
2..............................................
3..............................................
4..............................................
5..............................................
6..............................................

(தொடரும்)

வி.என்.எஸ். உதயசந்திரன்
B.A.(Cey)B.Ed(Hons)Dip. in Ed.

# க.பொ.த உயர்தர பொது (சாதாரண தர)ப் பரீட்சை - 2002


# கணிதம் - பகுதி I

(01) 3 மனிதர்கள் ஒரு வாய்க்காலை வெட்டுவதற்கு 4 நாட்கள் எடுக்கின்றன. ஒரு மனிதன் அவ்வேலையைச் செய்து முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுப்பார் எனக் காண்க?

3 மனிதர் வாய்க்கால் வெட்ட எடுத்த நாட்கள் = 4
1 மனிதர் வாய்க்கால் வெட்ட எடுத்த நாட்கள்
= 4x3
= 12.

(02) சுருக்குக.
8 x (-4)
= (-32).

(03) உருவில் காணப்படும் செவ்வகத்தின் சுற்றள்வைக் காண்க?




சுற்றளவு = (நீளம் + அகலம்) x 2
= (6+4)2
= 10 x 2
= 20 cm.


(04) காரணி காண்க.
$X^2 - Y^2$
(X-Y) (X+Y)

(05) ரூ. 400 இன் 1/5 எவ்வளவு?
400 x 1/5 = 80 ஆகும்.

(06) ஒரு பேனாவின் விலை ஒரு பென்சிலின் விலையின் மூன்று மடங்காகும். ஒரு பேனாவின் விலை ரூ.12 எனின், ஒரு பென்சிலின் விலையைக் காண்க?

பென்சிலின் விலை X ரூபா எனின்,
பேனா ஒன்றின் விலை 3X ரூபா ஆகும்.
பேனா ஒன்றின் விலை = 12 ரூபா
∴ பென்சிலின் விலை = 12/3
= 4 ரூபா.

(07) உருவில் காணப்படும் கனவுருவின் கனவளவைக் காண்க.





கனவளவு = நீளம் x அகலம் x உயரம்
= 3x 2x 2
= $12cm^3$.

(08) ஒரு இறாக்கையின் இரு தட்டுக்களுக்கிடையே உள்ள தூரம் 75 cm ஆகும். ஒரு தகரப்பேணியின் உயரம் 10 cm. இறாக்கையிலே ஒரு தட்டில் ஒன்றின் மீது ஒன்று இருக்குமாறு வைக்கப்படத்தக்க தகரப் பேணிகளின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையைக் காண்க?
= 75/10
= 7.5
உயர்ந்தபட்ச எண்ணிக்கை 7 ஆகும்.

(09) 1:50,000 என்னும் அளவிடைக்கு வரையப்பட்ட தேசப் படத்தில் இரு நகரங்களுக்கு இடையே உள்ள தூரம் 10 cm எனக் காணப்படின், அவ்விரு நகரங்களுக்குமிடையேயுள்ள உண்மையான தூரத்தைக் காண்க?

50,000 = 50,000 cm
உண்மையான தூரம் = 5 Km.

(10) உருவில் ABC ஒரு நேர்கோடு. $\hat{ABD}$ இன் பெறுமானத்தைக் காண்க?




$\hat{ABD}$ = 180 - 40°
= 140 ஆகும்.


(11) 4 தலையணை உறைகளைத் தைப்பதற்கு 2m பப்ளின் துணி தேவை. அதே துணியின் 5m இலிருந்து தைக்கப்படத்தக்க தலையணை உறைகளின் எண்ணிக்கை யாது?

2m பப்ளினில் தைக்கும் தலையணி = 4
1m பப்ளினில் தைக்கும் தலையணி = 4÷2
= 2
5m பப்ளினில் தைக்கும் தலையணி = 5x2
= 10.

(12) $101_{இரண்டு}$ என்னும் எண்ணை அடி பத்தில் தருக.


1 0 1
$1_2$ $1_1$ $1_0$ = $5_{பத்து}$
4+0+1

(13) உருவில் காணப்படும் தரவுகளுக்கு ஏற்ப, கோணம் d இற்குச் சமமான இரு கோணங்களை எழுதுக.




d = b (கு.எ. கோணம்)
d = f (ஒ.வி. கோணம்)
d = h (ஒத்த கோணம்)

(14) முரளி வார நாள் ஒன்றில் 24 மணித்தியாலத்தைச் செலவிடும் விதம் வட்ட வரைவில் காணப்படுகின்றது. இதற்கு ஏற்ப, முரளி வார நாள் ஒன்றில் விளையாட்டில் செலவிடும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை யாது?





= 30/360 x 24
= 2 மணித்தியாலங்கள்.

(15) ஆண்டிற்கு 20% என்னும் வட்டிக்கு 5000 ரூபாவைக் கடனாகப் பெறும் ஒருவர், 8 ஆண்டுகளுக்கு வட்டியாகக் கொடுக்க வேண்டிய தொகை யாது?

வட்டி = $\frac{முதல் \times காலம் \times வீதம்}{100}$
வட்டி = $\frac{5000 \times 8 \times 20}{100}$
வட்டி = 8000 /=

(16) உருவின் C யின் பெறுமானத்தைக் காண்க.





3 C+C = 180°
4 C = 180°
C = 45°

(17) பொது மடங்கில் சிறியதைக் காண்க.
8, 4X, 12 XY
8 = 2 x 2 x 2 ⟶ $2^3$
4x = 2 x 2 x X ⟶ $2^2$ x X
12 xy = 2 x 2 x 3 x X x y ⟶ $2^2$ x X x y x 3
பொ.ம.சி = $2^3$ x X x y x 3
= 24 xy

(18) சுருக்குக.
1/x + 3/2x
= $\frac{2+3}{2x}$
= 5/2X.

(19) A இலிருந்து B இன் திசைகோள் 038° ஆகும். B இல் இருந்து பார்க்கும்போது A இன் திசைகோளை எழுதுக?




180° - 38° = 142°
∴ 360° - 142° = 218°

(20) ஒரு நில அளவையாளரின் வெளிக்களப் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட வெளிக்களக் குறிப்பு உருவில் காணப்படுகின்றது. அதன் அளவீடுகள் மீற்றரில் தரப்பட்டிருக்குமெனின் A,B ஆகிய புள்ளிகளிலிருக்கும் எதிரிடைகளுக்கிடையே உள்ள தூரத்தைக் காண்க.

| | | |
|---|---|---|
| | 30 | |
| | 25 | |
| | 15 | 5 M B |
| D 9 M | 12 | |
| C 6 M | 8 | |
| | 5 | 7 M A |
| | 0 | |

A,B ஆகிய புள்ளிகளுக்கு இடையேயுள்ள தூரம் 10 M ஆகும்.

(21) சேகர், தம்மிடம் இருந்த பணத்தில் 1/3 ஐத் தனது மனைவிக்கும், மீதியைச் சமமாகத் தமது மூன்று புதல்வர்களுக்கும் பிரித்துக் கொடுத்தார். ஒரு புத்திரனுக்குக் கிடைத்த பங்கைக் காண்க?

மனைவிக்குக் கொடுத்த பணம் = 1/3
மிகுதிப் பணம் = 1 - 1/3
= 2/3
ஒரு புத்திரனுக்குக் கிடைக்கும் பணப்பங்கு
= 2/3 ÷ 3
= 2/3 x 1/3
= 2/9.

(22) ஓர் எளிய சமன்பாட்டைத் தீர்ப்பதற்கு எழுதப்பட்ட படிமுறைகள் கீழே காணப்படுகின்றன. இங்கே உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

30 - 2 (X-25) = 0
30 - 2 x.A..... = 0
- 2 x = ...B....
X = - 80/-2
= ...C....


A = 50.
B = - 80.
C = 40.

(23) ஒரு பிரதேசசபை குறித்த ஓர் வீட்டிற்கு மதிப்பீட்டு வரியாக ஒரு காலாண்டிற்கு 280 ரூபாவை அறிவிடுகிறது. பிரதேசசபை வீட்டின் ஆண்டுப் பெறுமானத்தின் 7% மதிப்பீட்டு வரியாக அறிவிடுகின்றது எனின், வீட்டின் ஆண்டுப் பெறுமானத்தைக் காண்க.

காலாண்டு வரி = 280
ஓர் ஆண்டு வரி = 280 x 4
= 1120
1120 = X x $\frac{7}{100}$
7 X = 112,000
X = $\frac{112,000}{7}$
X = 16,000
ஆண்டுப் பெறுமானம் 16,000 ரூபா ஆகும்.
அல்லது


X x $\frac{7}{100}$ x $\frac{1}{4}$ = 280
$\frac{7X}{400}$ = 280
7X = 112,000
X = 16,000/=

(24) உருவில் ABC என்பது ஓர் இருசமபக்க முக்கோணி. அதில் ABD, ACD ஆகிய முக்கோணிகள் ஒருங்கிசையுமெனின், $\hat{ADB}$ யின் பெறுமானத்தைக் காண்க. உமது விடைக்குக் காரணம் தருக?




$\hat{ADB} = \hat{ADC}$
காரணம்:- $\hat{ABD} \equiv \hat{ACD}$ (ப.கோ.ப)

(25) ஒரு பக்கத்தின் நீளம் 24 cm ஆன சதுரத் தகடு ஒன்றிலிருந்து ஒவ்வொன்றும் 7 cm ஆரையுள்ள அரை வட்டப் பகுதிகள் உருவில் காணப்படுகின்றவாறு வெட்டி நீக்கப்பட்டுள்ளன. அவ்வுருவின் சுற்றளவைக் காணக.



சதுரத்தின் சுற்றளவு = (நீளம் + அகலம்) x 2
= (24 + 24) x 2
= 48 x 2
= 96 cm
அரை வட்ட சுற்றளவு = 1/2 x 2 x 22/7 x 7
நான்கு அரை வட்டசுற்றளவு = 22 x 4
= 88 cm
எஞ்சிய பகுதி = 96 - 88
= 8 cm.

(26) தீர்க்க.
$X^2 + 4x = 0$
x(x+4) = 0
x=0 or x+4 = 0
X=0 or x=-4

(27) 2, 3, 6, 6, 8 என்னும் எண்களின்
1. இடையத்தைக் காண்க.
$\frac{n+1}{2}$ ஆவது ஈட்டு
$\frac{5+1}{2}$ = 3 ஆவது ஈட்டு = 6 ஆகும்.
2. இடையைக் காண்க.
$\frac{2+3+6+6+8}{5} = \frac{25}{5} = 5.$

(தொடரும்...)

சி.சிவசெந்தூரன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

- *திருக்குறள்*

# நமது நோக்கு

## திசைகாட்டுமா அமைதி?

சமாதான முயற்சிகளின் வழியில் - இன்று மிக முக்கியமான சந்திப்புக்கள் வன்னியில் இடம்பெறவிருக்கின்றன.

பேச்சுக்களில் இதுவரை இணக்கம் காணப்பட்ட விடயங்களை உடன் அமுலாக்கக் கோரியும், வொஷிங்ரன் மாநாட்டுக்கு அழைக்கப்படாததை ஆட்சேபித்தும்- தமது எதிர்ப்பைப் பதிவுசெய்யுமுகமாக, சமாதானப் பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் தற்காலிகமாக ஒதுங்கியதன் பின்னர் - இந்த விவகாரத்தின் தீவிரம் பற்றிச் சர்வதேசம் கவனம்கொண்டது.

விடுதலைப் புலிகளின் அறிவிப்பு - சமாதானப் பேச்சுக்களின் போக்கைச் செம்மைப்படுத்துவதற்கான நியாயமான தளத்தில் நின்று வெளியிடப்பட்டது என்பதைச் சர்வதேசம் உணர்ந்து கொண்டதன் வெளிப்பாடாகவே- இன்று வன்னிக்கு வந்து, விடுதலைப் புலிகளின் தலைமையுடன் பேச்சுநடாத்தி, சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் பங்கேற்பைக் கோர சர்வதேசம் விழைந்திருக்கிறது.

தமிழ்மக்களிடம், சமாதானப் பேச்சுக்களின் விளைவுகள் இன்னும் சென்றடையவில்லை என்ற விடுதலைப் புலிகளின் ஏமாற்றத்தைத் தன்னால் உணர்ந்துகொள்ள முடிவதாக - ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி அறிவித்திருப்பதும்,

சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகள் காட்டிவரும் ஆர்வம் மிகுந்த நம்பிக்கையைத் தருவதாக இருக்கும்போது - பேச்சுக்களின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தப் புலிகள் தவறிவிட்டார்கள் எனக் கூறப்படுவதை ஏற்கமுடியாதென்று வலியுறுத்திச் சொல்லியிருப்பதும் -

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டின் வெளிப்படைத் தன்மைக்கும், நியாயத்திற்கும் சர்வதேச அரங்கில் வலுச்சேர்த்திருக்கிறது.

இந்தநிலையில் - இன்று வன்னிக்கு வரும் யசுசி அகாஷி விடுதலைப் புலிகள் மீண்டும் பேச்சுக்களுக்கு வரவேண்டுமென வலியுறுத்தும் அதேவேளை -

விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பது பற்றிய, அவர்களது உறுதியான நிலைப்பாடு ஜப்பானிய விசேட தூதுவருக்கு எடுத்துக் கூறப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனடிப்படையில் - இதுவரை நடைபெற்ற பேச்சுக்களில் காணப்பட்ட இணக்கங்களின்படி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வு, போர்நிறுத்த உடன்படிக்கையின்படியான சுமுகநிலை, மீள்குடியமர்வு, போரினால் அழிந்த தமிழ்த்தேசத்தினைத் தாமதமின்றி மீளக்கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் உள்ளிட்ட முக்கியமான விடயங்களில் விடுதலைப் புலிகள் தமது உறுதியான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவர் என அறியமுடிகிறது.

இவையில்லாது - சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதிலுள்ள அர்த்தமின்மையும், தமிழ்மக்களிடம் அது ஏற்படுத்தும் நம்பிக்கையீனம் தொடர்பாக யசுசி அகாஷியிடம் எடுத்துக்கூறப்படும் எனவும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் - சர்வதேச சமூகம், அமைதி முயற்சிகளைத் தொடர்ந்து பேணுவதற்கு என்ன பதிலைத் தரப்போகிறது, அரசாங்கத்துக்கு எந்தவகையான அழுத்தங்கள் மேற்கொள்ளப்படப்போகின்றன, உறுதியாகச் சமாதானத்தைத் தக்கவைப்பதில் சர்வதேச சமூகம் இன்னமும் ஆக்கபூர்வமாக என்ன செய்தாக வேண்டும் போன்ற பல வினாக்களின் பேரில்தான் இனிமேல் அமைதிப் பேச்சுக்களின் செல்நெறியும் அமையப்போகின்றது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு ஒன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் ஆர்வம் காட்டும் சர்வதேசம் - அந்த அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமானதாகவும், செயற்திறன் மிகுந்த விளைவுகளைத் தரக்கூடியதாக அமையவும், சமாதானம் மக்களைச் சென்றடையும் - போரின் பாதிப்புக்களிலிருந்து அவர்களை மீட்டு சுமுகநிலைக்குக் கொண்டுவரவும் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பையும் கொண்டிருக்கிறது.

கடந்த கால வரலாற்றில் தமிழினம் ஏமாற்றப்பட்டது போன்று - இனியுமொரு நிகழ்வு நடைபெற்றுவிடக் கூடாது என்ற உறுதியுடன் செயற்படும் விடுதலைப் புலிகளின் பின்னால் தமிழினம் அணிதிரண்டிருப்பதைப் புரிந்து -

உடனடியாகவும், சாத்தியமானதாகவும் - தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை, ஆதங்கத்தை நிறைவேற்ற சர்வதேசம் முனைப்புக் காட்டுமாயின் மட்டுமே - சமாதானத்தின் பாதை சரியான வழியில் செல்லும்.

இந்தவகையில், இன்றைய சந்திப்பும் கலந்துரையாடலும் - தமிழர் நம்பிக்கையை கௌரவித்து, உரிய திசையில் சமாதானத்தை நகர்த்திச் செல்லும் என்ற எதிர்பார்ப்புடன் தமிழ்மக்கள் காத்திருக்கின்றனர்.

# இலங்கை இரண்டாக்கப்பட்டுவிட்டது; கடல் மட்டுமே பிரிக்கப்படவேண்டும்!

## ‘சிஹல உறுமய’ அமைப்பாளர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை நாட்டின் மீது தேசாபிமானம் கொண்ட அனைவரும் சிஹல உறுமயவுடன் இணைந்து, பச்சைப் புலிகளை நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று சிஹல உறுமயவின் அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தெஹிவளையில் நடைபெற்ற கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மையில் - கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கடிக்கப்பட்டது, புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிவந்த 15 ஆவது கப்பல். இந்தக் கப்பலை மூழ்கடித்த கடற்படைக்கு மரியாதை செய்ய வேண்டியது அனைவரதும் கடமை.

ஆனால், ஏனைய கப்பல்கள் பாதுகாப்பாக ஆயுதங்களைத் தரையிறக்கி விட்டன. இந்த ஆயுதங்களின் மூலம் படையினர் கொல்லப்படவுள்ளனர்.

அத்துடன், எல்லைக் கிராமங்களில் உள்ள மக்களும் பாதிக்கப்படவுள்ளனர். உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து படையினரை வெளியேற்றவே, புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாகப் புலிகளுக்குப் பணிந்துபோகும் நடவடிக்கைகளையே அரசு எடுத்து வருகிறது. ஜெனரல் சதீஸ் நம்பியாரை வைத்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடகம் ஆட முயற்சிக்கிறார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் தவறான நடவடிக்கைகளை, நாம் ஊடகங்கள் மூலம் வெளிக்கொண்டு வருவோம்.

கடந்த வருடம் பெப்ரவரி 22 ஆம் திகதியுடன் இலங்கையின் நிலப்பரப்பு உத்தியோகபூர்வமாக இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. கடற்பகுதி மட்டும்தான் பிரிக்கப்பட வேண்டியுள்ளது.

அண்மையில் - புலிகளின் திருகோணமலை மாவட்ட தளபதி பதுமனுக்கு, அரசாங்கம் ஹெலி ஒன்றை வழங்கியபோது, அதில் அவர் விரும்பிய இடங்களுக்குச் சென்று வந்தார்.

இதன்மூலம் சிங்கள மக்களை ஆட்லறி மூலம் விரட்ட வழி வகுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்குத் துணிவிருந்தால் ஹெக்கோனில் நடைபெற்ற பேச்சுக்களின் முழுவிபரங்களையும் வெளியிட வேண்டும்.

குடாநாட்டு இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மீது அழுத்தங்களைப் பிரயோகித்து, தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளவைக்க அரசு முயற்சிக்கிறது.

வெளிநாட்டு உதவிகளைப் பெற்று வட - கிழக்குப் பகுதிகளை நன்றாக அபிவிருத்தி செய்துவிட்டு, பிரபாகரன் தனித் தமிழ் ஈழத்தைப் பிரகடனம் செய்யப்போகின்றார்.

பதவியாப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை டி.எஸ். சேனநாயக்க நிறுவியிருந்தார். இந்தக் குடியேற்றவாசிகளைப் புலிகள் இப்போது துரத்தி வருகின்றனர்.

இலங்கை நாட்டின் மீது அபிமானம் வைத்துள்ள அனைவரும் ஒன்றிணைந்து, பச்சைப் புலிகளை வெளியேற்ற வேண்டும். இதற்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கின்றோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.



இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அஸ்கிரிய மைதானத்துக்குள் நாயொன்று திடீரென நுழைந்தபோது நடுவர் பயந்து ஓடுவதை படத்தில் காணலாம்.

# அதிகாரப் பகிர்வு முறை மூலம் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது!

## ஜே.வி.பி. எம்.பி. கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என நிராகரித்திருக்கிறார் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது -

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென, 1987 இல் மாகாணசபை முறையை அரசாங்கம் கொண்டு வந்தது. ஆனால், இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. அது மேலும் வலுவடைந்ததை மறந்துவிடக்கூடாது.

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் எந்தத் தீர்வையும் கண்டுவிடமுடியாது. அதுபோலவே, விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்வு கண்டுவிடலாம் என்பதும் கனவாகவே இருக்கும் என்றும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

# சமாதான முயற்சி வெற்றிபெறுவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும்

## மஹிந்த ராஜபக்ஷவிடம் யசுசி அகாஷி தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு - எதிர்க்கட்சிகள் அனைத்தும் பூரணமான ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுசி அகாஷி கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே - அவரிடம் அகாஷி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இச்சந்திப்பின்போது அகாஷி - அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என சர்வதேச சமூகம் மிகவும் எதிர்பார்ப்புடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்தும் இச்சந்திப்பில் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது. (01)

# படையதிகாரிகளுடன் புலிகள் வவுனியாவில் கலந்துரையாடல்

## கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வவுனியா மாவட்ட அலுவலகத்தில் - விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் எழிலனுக்கும், வவுனியா மாவட்டப் படை உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பில் - சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டபோது, வீரச்சாவடைந்த பதினொரு போராளிகளின் நினைவுக் கூட்டம் நெலுக்குளம் பாடசாலையில் நடத்தப்பட்டதற்குப் படையினர் தமது கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடந்த பேச்சுக்களின்போது, பாடசாலைகளில் இவ்வாறான அரசியற்கூட்டத்தினை நடத்துவதில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தனர் என்றும், அதற்கு மாறாக, மேற்படி நினைவுக கூட்டம் நடைபெற்றது எனவும் இராணுவத்தினர் கூறினர்.

இதற்குப் பதிலளித்த விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் - தாம் வவுனியா மாவட்ட பொலிஸாரிடம் அனுமதிபெற்றே மேற்படி கூட்டத்தினை நடத்தியதாகவும் -

நினைவுக் கூட்டம் ஒரு அரசியற்கூட்டமல்ல எனவும், இராணுவத்தினர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். (03)

# நாம் நல்லவராக நடந்தால் சமூகம் நன்றாகவே இருக்கும்!

**இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல நாவலாசிரியர் கே.எஸ். ஆனநதன் (கார்த்திகேசு சச்சியானந்தன் ) 1960 இல் எழுத்துலகில் காலடி வைத்து, இன்றும் தனது படைப்புக்களைப் படைத்து வருகின்றார்.**

**1962 இல் இவரது "அம்மா வேண்டும்" என்ற முதலாவது சிறுகதையும் 1964 இல் "உறவும் பிரிவும்" என்ற முதலாவது நாவலும் வீரகேசரியில் வெளியானது. அதனைத் தொடர்ந்து பதினெட்டு நூல்களையும், அறு பத்திரண்டு சிறுகதைகளையும், "அவரே இவராய்" என்ற ஆன்மீக ஆய்வு நூலையும் படைத்துள்ளார். ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் யாழ்.ஜனார்த் தனன், கண்ணன், பிறைசூடன் என்ற புனைபெயர்களில் எழுதியுள்ளார். இவரது நூல்களுள் "தீக்குள் விரலை வைத்தால்", "ராதையின் நெஞ் சம்". "பூஜைக்காக வாழும் பூவை", "காலங்கள் மாறும்", "காகித ஓடம்", "கர்ப்பக்கிரகம்", "இதயமலர்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. இந்தியாவில் மணிமேகலை பிரசுரம் இவரின் "காலங்கள் மாறும்" எனும் நூலினைச் சமீ பத்தில் வெளியிட்டுள்ளது. இவருடனான நேர்காணல் இது.**

***கேள்வி:*** நீங்கள் ஓர் நாவலாசி ரியர் என்ற முறையில் உங்கள் இலக்கிய வாழ்வு குறித்து என்ன சொல்கிறீர்கள்?

***பதில்:*** நான் எழுத்தைத் தொழி லாகக் கொண்டவன் அல்ல. நான் ஓர் விவசாயி என்றே என் தொழி லைப் பெருமையாகக் கூறுவேன். இது ஓர் சுதந்திரமான தொழில். மாணவப் பருவத்தில் கிடைத்த சுதந்திரத்தைக் கொண்டு, எழுதத் தொடங்கினேன். 1962- 1974 காலப் பகுதிக்குள் நிறையவே எழுதி னேன். 1975 இல் திருமணமானபின் குடும்பப் பொறுப்புகள், நேரமின்மை யால் ஓய்வுகிடைக்கும்போது எழுது வேன்.

***கேள்வி:*** இலக்கியத்திற்குள் உங்கள் பிரவேசம் எவ்வாறு அமைந்தது?

***பதில்:*** 1958 இல் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் H.S.C படித்துக் கொண்டிருந்தேன். அந்த வருடத்தில் நடைபெற்ற இனக்கல வரத்தில் - அதாவது, சிங்களக் காடையர்கள் எறிகுண்டு - வீசி, கடைகளைக் கொள்ளையிட்ட சம யம் - பொலிஸார், பொதுமக்கள் மத்தியில் வீதியில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன். இது என்மனதில் பெருந்தாக்கத்தைத் தந்தது. அந்த நிலையில்தான் - சிங்கள தேசத் தில் பலமுறை அரசாங்க, கூட் டுத்தாபன வேலைகள் கிடைத்தும் போகாது இருந்தேன். பின்பு யாழ்ப் பாணம் வந்து தொடர்ந்து படித்து, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரிப் பட்டதாரிகள் பிரிவில் வெளி




வாரி (பேராதனை) மாணவனாகப் படித்தேன். இதன்மூலம் நான் அடைந்த இலக்கிய ஆற்றல் என்னை இந்நிலைக்கு உயர்த்தி யது என்றே கூறவேண்டும்.

***கேள்வி:*** சமகால இலக்கியம் பற்றி, பதிவுகள் பற்றி உங்கள் அபிப்பிராயம்?

***பதில்:*** சமகால இலக்கியம் என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரி கின்றது. இன்றைய காலப்பதிவுகள்- நாளைய வரலாறுகள் ஆகலாம். மேலும், மற்றவர்களின் விருப்பு, வெறுப்புகளுக்காக நாம் எமது சுய உணர்வுகளை விட்டுவிட முடியாது. காலத்தின் பதிவுகள் அவசியமான வையே!

***கேள்வி:*** சமூகச் சீரழிவுகள் பற்றி ஓர் நாவலாசிரியன் என்ற முறையில் என்ன கூறவிரும்புகின் றீர்கள்?

***பதில்:*** சமூகச் சீரழிவுகள் என்று நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்று புரியவில்லை. காலங்கால மாக எம்முன்னோர் காப்பாற்றி வந்த கலாசார, பண்பாடுகளும், நாகரிக வளர்சியும் - இடப்பெயர்வுகள் தந்த வெளிநாட்டு புலம்பெயர்ந்தோரால் வரும் அளவுக்கதிகமான பணவரவு கள்- நல்லறிவு நற்பண்பு இல்லா தோரிடம் வந்து குவிவதால் தோன் றியுள்ள ஓர் "புதிய அலை" என்று தான் இதனைக் குறிப்பிடலாம்.

***கேள்வி:*** பல்வேறு குணவியல் புகள், பண்பாடுகள், வன்முறைச், சிந்தனையுள்ளோர், அறிஞர்கள் என்று பலதரப்பட்ட பாத்திரங்களைப் படைத்து நாவல்களில் நடமாட விடும் தாங்கள், அதற்கு நல்ல தோர் தீர்வையும் ஈற்றில் வழங்கு கிறீர்கள். ஆகவே, சமூகத்துக்குத் தாங்கள் சீர்திருத்தங்களை, அறிவு ரைகளை கூறலாம்தானே?

***பதில்:*** உண்மைதான். பல்வேறு உணர்வுகளுடன்கூடிய பாத்திர வார்ப்புக்களைப் படைக்கும்போது அப்பாத்திரங்களாக நாம் மாறி விடு வதுண்டு. அதனால்தான் எனது நாவல்களுக்கு வாசகர் மத்தியில் நிறைந்த வரவேற்புண்டு. புலவர் பார்வதிநாதசிவம், கவிஞர் காசி ஆனந்தன் ஆகியோர் இதுபற்றி என்னிடம் நேரில் கூறிப் பாராட்டியுள் ளார்கள்.

அதேசமயம், நான் ஒன்றை மட் டும் கூறவிரும்புகின்றேன். நாங்கள் இளைஞர்களாயிருந்த காலத்தை விட, இன்றைய சமூக அமைப்பில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனை எவரும் மறுக்கமுடியாது. நாங்கள் பெற்றோருக்கு, கற்பித்த ஆசிரியருக்கு அளித்த மரியாதை கள் இன்றைய இளந்தலைமுறை யிடம் இருக்கின்றதா? என்பது ஆய் வுக்குரிய விடயமாகும்.

இது பற்றி அதிகம்கூற நான் விரும்பவில்லை. வீட்டுக்கு வீடு வாசற்படி என்பார்களே அதே போன்று நாங்களே எங்களை விமர் சிக்க வேண்டி ஏற்பட்டுவிடும் இல் லையா?

***கேள்வி:*** நாவல்கள், சிறுகதை கள் மட்டுந்தான் எழுதுவீர்களா?

***பதில்:*** நாவல்கள், சிறுகதை கள், நாடகங்கள் (நிறைய மேடை நாடகங்கள்) எழுதியுள்ளேன். 1970 இல் "வாதவூர் வள்ளல்" என்ற புராண நாடகத்துக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் முதற்பரிசு தந்தது.

1972 இல் வீரசிங்கம் மண்ட பத்தில் (**College of fine Arts - Jaffna**) எனது இராமாயண நாட கம் இரு தடவை மேடையேற்றப் பட்டது. இளவாலை ஜெயந்தி புர டக்சன் என்ற ஓர் குழு 100 இற்கும் மேற்பட்ட தடவை ஓர் சரித்திர நாட கத்தை மேடையேற்றியது.

2000, 2001, 2002 மூன்றாண்டு களில் இணுவில் காரைக்கால் அம்பலவாணர் கலையரங்கத்தினர் "சாம்ராட் அசோகன்", "வேதம் புதிது" உட்படப் பல நாடகங்க ளையும் மேடையேற்றினர்.

***கேள்வி:*** நீங்கள் ஓர் எழுத் தாளனாக இருப்பதால், இன்றைய சமூகம் பற்றிய உங்கள் நோக்கு என்ன?



கே.எஸ்.ஆனந்தன்

***பதில்:*** சொல்வது யாருக்கும் எளிது. அதுபோல நான் சொல்ல விருமபவில்லை. எழுத்தாளன் உபதே சிப்பவன் அல்லன். நன்றும் தீதும் ஒரே மனதில்தான் தோன்றுகின்றது. நமக்கு நாம் நல்வர்களாக நடந்து கொண்டால், சமூகம் நன்றாக இருக்கும்.

"நீ காணும் சுக துக்கம் உனது பிறப்பின் கர்மபலன்" என்று எங்கோ படித்த ஞாபகம். புயல் அடிக்கிறது. இடியுடன் மழையும் பெய்கிறது. மக்கள் தவிக்கின்றனர். இது நீடித்து நிற்பதில்லை என்பதுதான் இயற் கையின் தத்துவம்.

அதுபோல எதற்கும் ஓர் முடிவு உண்டு. அதுவரை நாம் பொறுத் திருந்துதான் ஆகவேண்டும்.

**நேர்காணல்:-**
**எஸ். சாந்தகுமார்**

---

# அரசாங்க சுற்றறிக்கைகள் இனி மின்னஞ்சல் மூலமே!

உள்நாட்டு அலுவல்கள் அமைச் சினாலும், வட-கிழக்கு மாகாண சபையினாலும் எதிர்காலத்தில் விடுக்கப்படும் சுற்றறிக்கைகள் யாவும் மின்னஞ்சல் மூலமாகவே அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கு முன்னேற்பாடாகச் சகல திணைக்களங்களினதும் மின் னஞ்சல் முகவரிகளை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு திரட்டப் படுகின்றது.

இதேவேளை, வட-கிழக்குப் பகு திகளிலுள்ள பல திணைக்களங்க ளுக்கு இன்னமும் தொலைத் தொடர்பு வசதிகள் செய்து கொடுக் கப்படவில்லை. அத்துடன், சில திணைக்களங்களில் கணினி வசதி களும் இல்லாதிருக்கையில், மின் னஞ்சல் மூலம் சுற்றறிக்கை அனுப் பப்படுமாயின் - வட-கிழக்குப் பகுதி களிலுள்ள திணைக்களங்களுக்குச் சரியான முறையில் சுற்றறிக்கைகள் கிடைக்காமல் போகலாம் என அரச அதிகாரிகள் தெரிவித்தனர்

## புறநிலைப் படிப்புகள் அலகினால் திரைப்படக் கருத்தரங்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு ஒழுங்கு செய் துள்ள திரைப்படக் கருத்தரங்கு தொடர் - 02, எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது.

"வித்தியாசமான தமிழ்த் திரைப் படங்கள்" என்ற தலைப்பில் எழுத் தாளர் க.சட்டநாதன் உரையாற்ற வுள்ளார். தொடர்ந்து கலந்துரையா டல்கள் நடைபெறும்.

இக்கருத்தரங்கிற்கு ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென, புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித் துள்ளார்.

## நாடகம் எழுதும் கற்கை; விண்ணப்பம் செய்யலாம்!

நாடக எழுத்துருவாக்கம் சம் பந்தமான கற்கைநெறிக்கு, 'ஆர்வ முள்ளவர்களிடமிருந்து - நாடக அரங் கக் கல்லூரி விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஞாயிறு தோறும் காலை 9 மணி முதல் 1 மணிவரை தொடர்ச்சியாக 12 வாரங்களுக்கு நடைபெறவுள்ள இக்கற்கை நெறியானது, எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

ஆர்வமுடையவர்கள், விண்ணப் பப் படிவம் மற்றும் மேலதிக விபரங் களைப் பெற்றுக்கொள்ள - நிறை வேற்று இயக்குநர், நாடக அரங்கக் கல்லூரி, தாயகம், திருநெல்வேலி வடக்கு எனும் முகவரிக்கு சுய விலாசமிட்டு, முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## மாடிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா

(நவிண்டில்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நெறோட் திட்டத்தின் கீழ் இருமாடிக் கட்டடத்தை அமைப் பதற்காக அடிக்கல் நாட்டும் விழா இன்று காலை 9 மணிக்கு நடை பெறும்

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கம் கலந்து கொள்ளவுள்ளா ரெனக் கல்லூரி அதிபர் கி.நடராஜா தெரிவித்தார். (116)

## இந்து மாநாட்டை முன்னிட்டு சிறப்பு நிகழ்வு

(கோப்பாய்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, கோப்பாய் பிரதேச செயலகத்தில் விசேட பொங்கல் விழாவும், சிறப்பு சமயச் சொற்பொழிவுகளும் இன்று காலை நடைபெறவுள்ளன.

# வட-கிழக்கு பாடசாலைகளை புனரமைக்க 172 கோடி ரூபா

**உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும்**

உலக வங்கி, ஆசிய அபிவி ருத்தி வங்கி ஆகியன வடக்கு- கிழக்குப் பாடசாலைகளின் கல்வி மேமபாட்டுக்காக 172 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங் களிலுள்ள 80 பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை அபிவி ருத்தி செய்வதற்காக, உலக வங்கி 100 கோடி ரூபாவை வழங்க இருக் கின்றது. தொழிற்கல்வித் திட்டத் தின் 21 ஆவது கட்டத்திற்கு அமைய இத்திட்டம் அமுலாக்கப்படும்.

போர் அனர்த்தங்களால் பாதிக் கப்பட்ட வடக்கு - கிழக்குப் பாடசா லைகளின் கட்டடங்களைப் புனர மைப்பதற்கு இத்திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## மேலும் பல கிராமங்களுக்கு இம்மாதத்துள் மின்விநியோகம்

யாழ்.குடாநாட்டில் பல கிராமங் களுக்கு இம்மாத இறுதிக்குள் மின் சார விநியோகம் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான மின்விநியோக புன ரமைப்பு வேலைகள் தற்போது நடை பெற்று வருகின்றன.

கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்தத்தால், மின்சார விநியோகம் இடம்பெற்ற கிராமங்கள் பலவற்றில் தற்போது மின்சார விநியோகம் தடைப்பட்ட நிலையில் உள்ளது.

38 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க அங்கீகாரம் கிடைத்துள்ள போதும், 26 கிராமங்களுக்கே தற் போது மின்சாரம் வழங்க முடியு மென மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தென்மராட்சி உட்பட சில்லாலை, இடைக்காடு, இடும்பன், தொட்டிலடி, பன்னாலை ஆகிய பகுதிகளுக்கு இம்மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள் ளன. (34)

## மருந்துகள் கிடைத்தன

வலி. கிழக்குப் பிரதேச சபையின் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக குரிய மருந்துகள் கொழும்பு மகர கம சிறிலங்கா ஆயர்வேத மருத்து வக் கூட்டுத்தாபனத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலி. கிழக்குப பிரதேச சபையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் பொன். சண்முகரத் தினம் அறிவித்துள்ளார்.

## நினைவுப் பேருரை

யாழ்.கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி யின்- தனிநாயகம் தமிழ் மன்றத்தி னரின் ஏற்பாட்டில், தனிநாயகம் அடி களாரின் ஞாபகார்த்த ஏழாவது நினை வுப் பேருரை - நாளை மாலை 3.45 மணிக்குக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது "தமிழ்த் திரையு லகு -பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும்" என்னும் பொருளில் பிரபல விமர்சகரும், எழுத்தாளரு மான அ.யேசுராசா நினைவுப் பேரு ரையை ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு தனி நாயகம் தமிழ் மன்றத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சிறுவனை வேலைக்கு வைத்திருந்த ராணுவ உயரதிகாரியின் மனைவி!

## ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிப்பு

ஒன்பது வயதுச் சிறுவனை வீட்டில் வேலைக்கமர்த்தியது தொடர்பாக, இராணுவத்திலுள்ள உயர் அதிகாரி ஒருவரின் மனைவி மேற்படி சிறுவனின் பெயரில், ஒரு லட்சத்து எண்ணாயிரம் ரூபாவை வங்கியில் வைப்பிலிடுமாறு சிறுவர் பாதுகாப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சப்புகஸ்கந்த மாகொலையில்- வசிக்கும் வி.சி.பி ரூபசிங்க என்ற பெண்மணிக்கே நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது. இந்தச் சிறுவன் அவிசாவளையைச் சேர்ந்தவர் என்றும் தெரியவருகிறது.

மே மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பு இந்தத் தொகையை வைப்பில் இட வேண்டும் என்றும், சிறுவன் பதினெட்டு வயதுவரை தாயின் பராமரிப்பில் இருக்க வேண்டுமென்றும் நீதிமன்றம் ஆணைபிறப்பித்துள்ளது.

# பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள்!

(கொழும்பு)

'தருண அருண' திட்டத்தில் பதிவுசெய்த பத்தாயிரம் பட்டதாரி களக்கு, விரைவில் வேலைவாய்ப்பு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தனியார் துறைகளில் இந்த வேலைவாய்ப்புப் பயிற்சிகள் வழங் கப்படவுள்ளன. இம்மாதம் முதல் வேலைவாய்ப்புப் பயிற்சிகளைப் பெறவுள்ள முதற்தொகுதி பட்டதாரி களுக்கு அரசாங்கம் 4000 ரூபாவை வழங்கவுள்ளது. பயிற்சிகள் வழங் கும் நிறுவனங்களை தலா 2000 ரூபா கொடுப்பனவை வழங்குமாறும் அரசாங்கம் கேட்டுள்ளது.

495 நிலையங்களில், இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. தற்போது 25, 800 வேலையற்ற பட்ட தாரிகள் நாட்டில் இருப்பதாகவும், இவர்களில் 18 ஆயிரம் பேர் உள் வாரிப் பட்டதாரிகள் என்பதும் குறிப் பிடத்தக்கது.

திறஞ்சனாஸ் சங்கானை

சிவாஜி, பத்மினி நடித்த

தில்லானா மோகனாம்பாள்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)

CHINA STRIKE FORCE

(சி-882)

ராஜா யாழ்ப்பாணம்.

6 முதல் 7வரை

JURASSIC PARK 3

10.30, 6.30, 6.30,

சரத்குமார், சிம்ரன் நடித்த

அரசு

7 வரை - 2.30 இற்கு மட்டும்.

அடுத்த புதிய வெளியீடு

கீதை

(சி-883)

## சைவ சமய பொது அறிவுப்போட்டி

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், 2 ஆவது அகில உலக இந்து மாநாட்டை முன்னிட்டு, சைவசமய பொது அறிவுப்போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி - எதிர்வரும் 10 ஆம் திகதி எனவும், விண்ணப்பப் படிவங்களை- 163, நாவலர் வீதியி லுள்ள சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறி விக்கபபட்டுள்ளது.

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

# 2 ஆவது உலக இந்து மாநாடு நிகழ்வுகள்

## 02.05.2003 தொடக்கம் 10.05.2003 வரை

"சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

01. '2 ஆவது உலக இந்து மாநாடு' 2 - 6 மே 2003 என்ற தலைப்பிலான மாண்புமிகு அமைச்சரின் 1000 துண்டுப் பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்தல்.
02. பிரதான 20 இடங்களில் மேற்படி மகாநாடு 'பனர்களை' தொங்கவிடுதல்.
03. சங்க நிலையங்கள் அனைத்திலும் வாழைமரம் நிறுத்தி மங்கள தோரணங்கள் கட்டி அலங்கரித்தல்.
04. நந்திக் கொடியை சங்க நிலையங்கள் அனைத்திலும் ஏற்றிவைத்தல்.
05. மாநாட்டைக் குறிக்கும் 1000 'பைச்சுகளை' மக்கள் அனைவரும் தமது உடையில் அணிய வசதி செய்தல்.
06. சங்கக் காரியாலய முன்றலில் சமய குரவர் நால்வரின் படங்களை வைத்து மலர்மாலை அணிவித்து மங்கள விளக்கேற்றல்.
07. மேற்படி தினங்களில் பணியாளர்கள் திருநீறு, சந்தனம் தரித்து தூய்மையான உடையில் கடமையில் ஈடுபடல்.
08. தினமும் 'ஒலி நாடா' மூலம் தோத்திரப் பாக்களையும் சமயப் பிரசங்கங்களையும் கேட்க வசதி செய்தல்.
09. 08.05.2003 இல் சமய குரவர் நால்வரின் படங்களும் சைவ சின்னங்களும் தாங்கிய ஊர்தி சங்க எல்லைப் பரப்பில் பவனி வருதல்.
10. இந்து மதம் சார்ந்த புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்.
11. மேற்படி நிகழ்வில் பங்கு பற்றியவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசில்கள் வழங்குதல்.
12. இறுதி நாள் (10.05.2003) - நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகள் அதில் மங்கள இசை, இசைக்கச்சேரி, பண்ணிசை, பாலர்கள் நிகழ்ச்சி, பட்டிமன்றம், தமிழக அறிஞர்களின் சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும்.

2 ஆவது உலக இந்து மாநாட்டுக்கு எமது வாழ்த்துக்கள்.

கூட்டுறவே நாட்டுயர்வு

கலாசார கூட்டுறவுப் பெருமன்றம்.

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

(சி/905)

# பணிநிலை வெற்றிடம்

சமையலாளர், சமையல் உதவியாளர் போன்ற பணிநிலைகளுக்கான விண்ணப்பங் கள் கோரப்படுகின்றன.

தகைமையுடையவர்கள் 2003.05.20 ஆம் நாளுக்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு நேரில் வருகைதரவும்.



**தகைமை :-** உணவு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு :-** திறமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற ஊதியம் வழங்கப்படும்.



நடுவப் பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.



(சி-895)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழ்நாட்டுப் பேச்சாளர்கள் யாழ்ப்பாணம் வந்தனர்!

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டையொட்டிய நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக, இந்தியாவிலிருந்து வருகைதந்த தமிழ்நாட்டு அறிஞர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளனர். இவர்களை அழைத்து, சொற்பொழிவுகளை நடாத்த விரும்பும் இந்து ஆலய நிர்வாகத்தினரைத் தொடர்புகொள்ளுமாறு, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

தமிழக அறிஞர்களால் சொற்பொழிவு ஆற்றக்கூடிய விடயங்களும் அவர்தம்பெயர் விபரங்களும் வருமாறு:-

'கண்ணகி' - முனைவர் சரளா இராஜகோபால், 'நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு' - திருமதி.வாசுகி கண்ணப்பன், 'முருகனின் வேல் வெல்லும்' - டாக்டர்.விஜயலட்சுமி இராமசாமி, 'திருக்குறளில் கலைகள்' - திருக்குறள் லலிதா சுந்தரம், 'திருக்குறளில் குடும்பம்' - டாக்டர். கஸ்தூரிராஜா, 'கம்பனின் கவிநயம்'- பேராசிரியர் உலகநாயகி பழனி, 'தமிழ் இலக்கியத்தில் இன்றைய அறிவியல்' - பேராசிரியர் கண்ணப்பன், 'தமிழ் மொழியும் தமிழினமும்' - முனைவர் மலையமான், 'வீரபத்திரரின் அருள்நலங்கள்' - திருமதி.லலிதா சுந்தரம், 'கந்தபுராணமும் திருக்குறளும்' - முனைவர் கஸ்தூரிராஜா, 'பெரிய புராணத்தில் பக்தி' - புலவர் இராஜேஸ்வரி, 'தேவார இசை' - முனைவர் திலகவதி சண்முகசுந்தரம், 'வாழ்வியல் வீரபத்திரர்' - திருமதி வாசுகி கண்ணப்பன், 'வள்ளலார் தந்த ஒருமைப்பாடு' - தெய்வநாயகி ஜோதி ஆகியோர் சொற்பொழிவாற்றத் தயாராகவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.



மட்டு. நகரில் நேற்று நடைபெற்ற உலக இந்து மாநாட்டின் பிராந்திய விழாவில் இரு காட்சிகளைப் படங்களில் காணலாம்.

யாழ். பல்கலைக்கழக அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

மேற்படி ஒன்றியம் 05.05.2003 அன்று காலை 10 மணியளவில் ஆனந்தகுமாரசுவாமி விடுதியில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டபோது பின்வரும் அதிர்ஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

1 ஆம் பரிசு இல. 7097 துவிச்சக்கரவண்டி.
2 ஆம் பரிசு இல. 7514 ரேப்றெக்கோட்.
3 ஆம் பரிசு இல. 0282 பெற்றோல் மாக்ஸ்.

ஆறுதல் பரிசு இலக்கங்கள் முறையே,
5014, 9008, 0010, 2050, 0300,
6464, 4341, 0399, 5000, 4142.

பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலிகள் எதிர்வரும் 10.05.2003 இற்கு முன் பாலசிங்கம் ஆண்கள் விடுதியில் தங்களது சீட்டுக்களை காட்டிப் பரிசில்களை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(336)

## பிரதமர் ரணில் உரை மீதான விவாதம் நாளை

(கொழும்பு)

சமாதானத்தின் தற்போதைய நிலை குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை மீதான விவாதம் நடத்துவதற்கு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தின்போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி, இம்மாதம் 8 ஆம் திகதி காலை 10 மணிமுதல் மாலை 6.30 வரை விவாதத்தை நடத்துவது என்று முடிவுசெய்யப் பட்டுள்ளது.

## வெடிகுண்டு...

பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் வந்து படகைப் பார்வையிட்டனர். இப்படகு நீண்டகாலம் இப்பகுதியில் நின்றுள்ளதாலேயே மிகவும் பழுதடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கு....

மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் - மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்து, ஜப்பானிய விசேட தூதுவர் கலந்துரையாடினார். அத்துடன் - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், அரச தரப்புப் பிரதிநிதிகள், அருட்தந்தை மில்லர் ஆகியோரையும் சந்தித்து மாவட்ட நிலைவரங்களைக் கேட்டறிந்தார்.

இதன்பின், மூதூருக்கான விஜயத்தை மேற்கொண்டு தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்தார்.

## பிரபா...

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும், அடுத்தமாதம் ரோக்கியோவில் நடைபெறவுள்ள, இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - விடுதலைப் புலிகளை பங்கேற்கச் செய்வது தொடர்பாகவும், ஜப்பானியக் குழுவினர் பேசுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகள் இடைநிறுத்தியதற்கான காரணம் குறித்து, புலிகளின் தரப்பில் ஜப்பானியக் குழுவுக்குத் தெளிவுபடுத்தப்படவுள்ளது. இதுவரை பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் அமுல் செய்யப்படாமை குறித்தும், விடுதலைப் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படவுள்ளது.

பேச்சுக்களை இடைநிறுத்துவதாக, பிரதமர் ரணிலுக்கு கடந்த மாதம் 21 ஆம் திகதி, அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் குறித்து, இன்றைய பேச்சுக்களில் விடுதலைப் புலிகளும் - ஜப்பானியக் குழுவும் ஆராயவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமை, தமிழ்ப் பகுதிகளுக்கான அபிவிருத்தி நிதியின் பகிர்வு, மீள்குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம் போன்ற விடயங்களும் இன்றைய பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

## யாழில் சுமுகநிலை...

பங்கிடுவதாகும். இரண்டு தசாப்தகாலப் போரினால் முழுப் பொருளாதாரமும் அழிவுற்றுள்ளது. இதை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். இலங்கைக்கான நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியே எமது செயற்திட்ட இலக்கு. இதில் ஒன்று, வடக்கு - கிழக்குப் பகுதிக்கான நீண்டகால அபிவிருத்திக்காக வளங்களை வழங்குவதாகும்.

விடுதலைப் புலிகளின் அச்சம் என்னவெனில், நாம் பெற்றுக்கொள்ளும் முழு வளங்களும் தெற்கிற்குத் திரும்பிவிடும் என்பதாகும். அதே நேரம் தெற்கிலுள்ளவர்களின் அச்சம், கிடைக்கும் உதவிகள் முழுவதும் வடக்கிற்குச் சென்றுவிடும் என்பதாகும். இதில் எதுவும் நடைபெறாது. நாம், கிடைக்கும் வளங்களை வடக்கு-கிழக்கிற்கும், ஏனைய பகுதிகளுக்கும் வழங்குவோம். கடந்த செப்ரெம்பரில் நடைபெற்ற ஒஸ்லோ நிதியுதவி மாநாட்டின் பின்னர், உடனடி அவசரத் தேவைக்கு உதவி வழங்க, உதவி வழங்கும் நாடுகள் முன்வந்தன. ஒஸ்லோவில்தான் வடக்கு-கிழக்கு உட்பட, இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்குமான அபிவிருத்தி உதவிக்காக, ரோக்கியோ மாநாட்டைக் கூட்ட முடிவானது.

வடக்கு - கிழக்கு மீள்கட்டுமானத்தில் விடுதலைப் புலிகளின் பங்குண்டு. ஒஸ்லோ கூட்டம் இதை ஏற்றுக்கொண்டு, சர்வதேச சமூகத்தின் பங்களிப்பையும் வழங்க முன்வந்தது.

இரண்டாவது விடயம், வடக்கு - கிழக்கு வாழ் மக்களின் இயல்பு வாழ்க்கை. இடம்பெயர்ந்து வாழ்ந்த குடும்பங்கள் தற்போது மீள்குடியேறி வருகின்றன. இவர்களுக்கான நிதியுதவி வழங்கப்படுகின்றது. சிறான் மூலம் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்துள்ளோம்.

அடுத்தது, உயர் பாதுகாப்பு வலயம். இது பாதுகாப்புடனும் மக்களின் மனிதாபிமானத்துடனும் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படுகையில், இராணுவப் பிரசன்னம் குறைக்கப்படும். வழமைநிலை திரும்பினால் யாழ்ப்பாணத்தில் பெருமளவு படைகளின் பிரசன்னம் தேவையற்றதாகிவிடும். நாட்டின் ஏனைய பகுதிகள் போன்று அங்கு குறைந்தளவு படையினரே நிறுத்தப்படுவர்.

தேசிய பாதுகாப்பு ஒவ்வொரு கட்டத்திலும் கருத்தில் கொள்ளப்படுகிறது. சில விடயங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன. உதாரணத்துக்கு, யாழ்.நகரின் மத்தியில் உள்ள ஹோட்டேல்களில் தங்கியிருக்கும் படைமுகாம்களை யாழ்.கோட்டைப்பகுதிக்கு மாற்றும் விடயம் தீர்க்கப்படாதுள்ளது. இவ்விடயம் தொடர்பாக மக்களிடையே சில தவறான எண்ணக்கருக்கள் உள்ளன. இதை இச்சபையில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த படைமுகாம் மாற்றத் திட்டத்தினால், பலாலிக்கான உயர்பாதுகாப்பு வலயத்தில் எந்த மாற்றங்களும் ஏற்படாது. யாழ். நகரினுள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் மட்டும் சில மட்டுப்படுத்தப்பட்ட மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக, நாம் இந்தியாவின் முன்னாள் படைத்தளபதியும் பொஸ்னியாவில் ஐ.நா படைத்தளபதியாகவும் இருந்த ஜெனரல் நம்பியாரின் நிபுணத்துவ ஆலோசனையை பெறுகின்றோம். அவர், இன்று தனது அறிக்கையுடன் இலங்கை வந்துள்ளார். அவர் ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், இராணுவத்தளபதி மற்றும் என்னைச் சந்திக்கவுள்ளார்.

அண்மைக்காலத்தில் எழுப்பப்பட்டுள்ள மற்றுமோர் விடயம், கடல் மோதல் தவிர்ப்பு விடயமாகும். கண்காணிப்புக்குழு இது தொடர்பாக ஆலோசனையை சமர்ப்பித்து - இது குறித்து அரசிடமும், புலிகளிடமும் ஆலோசனை கோரியுள்ளது. இவ்விடயத்தில் கடல் சம்பந்தமான ஆலோசனையை, இந்திய கடற்படையின் முன்னாள் தளபதி வைஸ் அட்மிரல் ஜேக்கப்பிடம் நாம் கேட்டுள்ளோம். அவ்கூட இன்று இலங்கை வருகிறார். இது தொடர்பான ஓர் இணக்கநிலை ஏற்படச் சிலகாலம் செல்லலாம்.

இறுதியாக, போர்நிறுத்த உடன்படிக்கையில் சில முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கின்றன. இவை மனித உரிமைமீறல் தொடர்பான விடயங்கள். இதில் முக்கியமாக, புலனாய்வு நபர்களின் அண்மைக்காலப் படுகொலைகள் மற்றும் அரசியல்வாதிகளின் கொலைகளாகும். இவற்றைத் தடுக்கப் பொருத்தமான நடவடிக்கையை எடுக்கப் படைகளைக் கேட்டுள்ளோம்.

முஸ்லிம்கள் தொடர்பான விடயங்களில், விரைவில் முஸ்லிம் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளும் சந்தித்து இணக்கநிலை ஏற்படுத்த முயற்சி செய்வர்.

இந்த நேரத்தில் சமாதான முயற்சிகள் மீள ஆரம்பிக்கவும், பாதுகாப்பு வலை ஒன்றை வழங்கவும்- அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், இந்தியா உட்பட எமது நட்புநாடுகள் முன்வந்துள்ளன.

சர்வதேச சமூகத்தின் நல்லெண்ண நடவடிக்கைகள் மூலம் நல்ல விளைவுகளை நாம் கண்டு வருகிறோம். உதாரணமாக எரிக் சொல்ஹெய்ம் - பாலசிங்கத்தைச் சந்தித்துள்ளார். விதார் ஹெல்கிசனுக்கும், புலிகளின் தலைமைப் பீடத்துக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் நோர்வே, ஜப்பானிய உயர்மட்டப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசியுள்ளனர். இவர்கள் என்னையும் சந்தித்துள்ளனர்.

வன்னிசெல்லும் நோர்வேப் பிரதிநிதிகள் கொழும்பு திரும்பியதும், அவர்களை நான் சந்திக்கவுள்ளேன். நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் விரைவில் இங்கு வரவுள்ளார். அமெரிக்காவிலிருந்து கிறிஸ்ரினா ரொக்கா அடுத்தவாரம் வருகிறார். முழுமையாகப் பார்க்கையில் சமாதான முயற்சியில் நோர்வேயும், ரோக்கியோ மாநாடு குறித்து ஜப்பானும் ஆர்வமாகச் செயற்படுகின்றன என்றார்.

## பொறுமை...

ஜஸ்வந்த் சின்ஹா கூறியது இன்றும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. உங்களுக்குப் பொறுமையில்லாவிட்டால், விமானத்தை பிடித்து நோர்வேக்குத் திரும்பிவிடுங்கள் என்று, அவர் எம்மிடம் அன்று கூறினார்.

தற்போதைய நிலையிலிருந்து முன்னேற்றம் காண்போம் என்பதில் எமக்கு ஓர் முழுமையான நம்பிக்கை இருக்கிறது. எனினும், இந்த முயற்சிகள் நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம்.

இம்முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பும் அவசியமானதென எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

மங்களகரமான திறப்பு விழா
சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட யப்பான் நாட்டுத் தயாரிப்பிலான சோனி, நஷனல், பனசோனிக், ரீவி, டெக், ரேடியோ, அதற்குரிய உதிரிப்பாகங்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
குறிப்பிட்ட சில தினங்களுக்கு சலுகைகள் வழங்கப்படும்.
ஷன் மல்ரி ரேட் சென்ரர்
150, k.k.s வீதி, யாழ்ப்பாணம்.
(335)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.